## கேலிக் கூத்தும் – துர்நாற்றம் வீசும் வார்த்தைகளும் தொடர்ந்தால்

# முதலமைச்சர் விஜய்யின் திமிர் பிடித்த பேச்சு அடக்கப்படும்!

## தி.மு.க. ஐ.டி.விங் எச்சரிக்கை!

DMK IT WING

சென்னை, ஜூலை 12–

தி.மு.க. ஐ.டி.விங் முதலமைச்சர் விஜய்க்கு விடுத்துள்ள பதிலடி வருமாறு :

மாண்பு இல்லாத முதல்வர்! நாவடக்கத்தை மறந்தால் மக்கள் அடக்கத் தயங்க மாட்டார்கள்!

மாநிலத்தின் முதலமைச்சர் என்ற பொறுப்புக்கும், அந்த இருக்கையின் கண்ணியத்திற்கும் துளியும் சம்பந்தமில்லாமல், மூன்றாந்தர வீதிப் பேச்சாளரைப் போலத் தரம் தாழ்ந்து பேசுவதை முதலமைச்சர் விஜய் நிறுத்திக்கொள்ள வேண்டும்!

'ஓடு.. ஓடு..', 'கொளத்தூரில் கொத்து பரோட்டா', 'வெளுத்து விடுங்க' என உங்கள் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும், இந்தமாநிலத்தின்நிர்வாகத்தையே கேலிக்கூத்தாக்கும் துர்நாற்றம் வீசும் வார்த்தைகளாகவே இருக்கின்றன.

நீங்கள் பின்பற்றும் கொள்கைத் தலைவர்களின் பெயர்களைக் வெறும் அடையாள அரசியலுக்காக மட்டும் பயன்படுத்தாமல், குறைந்தபட்சம் அவர்களின் பண்பையாவது உங்கள் பேச்சில் வெளிப்படுத்துங்கள்.

'வாய் இருக்கிறது என்பதற்காக என்ன வேண்டுமானாலும் பேசுவேன்' என்ற உங்கள் திமிர் பிடித்த பேச்சு, ஒரு முதலமைச்சருக்கும் அறவே அழகல்ல.

நாவடக்கம் என்பது உங்களுக்கு மிக மிக அவசியமான ஒன்று! பொறுப்புணர்ந்து பேசக் கற்றுக்கொள்ளுங்கள்; இல்லையெனில், மக்களின் கோபத்தால் அந்த நாக்கு நிச்சயம் அடக்கப்படும்!

**கனிமொழி கருணாநிதி எம்.பி.யை காவல்துறை அவமதிப்பதா?**

செய்தியாளர்களைப் பார்த்தால் பயம், எதிர்கட்சிகள் பேசினால் பயம், அவர்களின் திட்டங்களின் பெயரைக் கேட்டால் பயம், தங்கள் கட்சி அமைச்சர்களின் சர்ச்சைகளால் பயமென, பயத்திலேயே திரியும் த.வெ.க அரசு, தற்போது எதிர்கட்சியினர் வெளியே வந்தாலே பயத்தில் நடுங்க ஆரம்பித்துள்ளது.

நேற்று, தூத்துக்குடி மாவட்டத்தில் மாவீரன் அழகுமுத்துக்கோன் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்த வந்த தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி.யை த.வெ.க அரசின் காவல்துறையினர் பாதி வழியிலேயே தடுத்து நிறுத்தியுள்ளனர். பின்னர் அவர் காரில் இருந்து இறங்கி அங்கிருந்து நடந்தே சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளார்.

ஆட்சிக்கு வந்தநாள் முதல் பொய், பித்தலாட்டம், அராஜகம், களவாணித்தனம் செய்வதையும், அடக்குமுறைகளை ஏவிவிடுவதை மட்டுமே வாடிக்கையாகக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டத்திற்கு காலம் தக்க பாடத்தை புகட்டும்!

இவ்வாறு ஐ.டி. விங் எச்சரித்துள்ளது!

# சுதந்திரத்தின் விதையை தமிழ் மண்ணில் விதைத்த மாவீரர் அழகுமுத்துக்கோன்!

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு முகநூலில் புகழாரம்!




சென்னை, ஜூலை 12

முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள முகநூல் பதிவு வருமாறு:-

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வீர முழக்கம் எழுப்பி, சுதந்திரத்தின் விதையைத் தமிழ் மண்ணில் விதைத்த மாவீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்த நாளில், அவருக்கு எனது வீர வணக்கத்தையும், புகழ் மரியாதையையும் செலுத்துகிறேன்.

அந்நிய ஆதிக்கத்திற்குத் தலைவணங்க மறுத்த தமிழரின் அஞ்சாத வீரத்திற்கும், விடுதலை உணர்விற்கும் நிலையான அடையாளமாகத் திகழ்ந்தவர் மாவீரர் அழகுமுத்துக்கோன் அவர்கள். உயிரை இழந்தாலும் சுதந்திரத்தை இழக்கக் கூடாது என்ற உறுதியுடன் தாய்நாட்டிற்காகத் தன்னையே அர்ப்பணித்த மாமனிதர்.

அவரது வீரமும், தியாகமும், அடிமைத்தனத்திற்கு எதிரான உறுதியான நிலைப்பாடும் தலைமுறைகள் கடந்து தமிழர்களின் மனங்களில் விடுதலை உணர்வை விதைத்துக் கொண்டே இருக்கும். அவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தமது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில் – கொளத்தூர் கிழக்குப் பகுதி

# 68 (அ) வட்டக் கழகச் செயலாளர் பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் இல்லத் திருமண விழா!

## ஆர்.எஸ்.பாரதி - சா.சி.சிவசங்கர் - எஸ்.ஜெகத்ரட்சகன் - கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - ப.ரங்கநாதன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை. 12

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்குப் பகுதி, 68 (அ) வட்டக் கழகச் செயலாளரும், மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் பி.டி.சி.ரவி (எ) எஸ். சிவக்குமார் எஸ்.ஆனந்தி ஆகியோரின் புதல்வர் டாக்டர் எஸ்.சபரிவாசனுக்கும், மதுரை மாவட்டம், கோ.வீரபத்திரன் – கோ.பார்வதி (எ) பவானி ஆகியோரின் புதல்வி டாக்டர் வி.கார்த்திகாராஜம் ஆகியோரின் திருமண விழா இன்று (12.07.2026 – ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு மேல், சென்னை, ஜி.கே.எம்.காலனி, பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.



கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக சட்டத் திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதரன், கொளத்தூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எ.நாகராசன் எம்.சி,கே.சந்துரு, தேவஜவ கர், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, டி.கே.எஸ். இளங்கோவன், அன்பகம் கலை, எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ, பா.தாயகம் கவி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ., பி.வில்சன் எம்.பி, முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, மேயர் பிரியா ராஜன், மாதவரம் எஸ்.சுதர்சனம், நே.சிற்றரசு எம்.சி, பி.டி.சி.செல்வராஜ், ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், எம்.கே.மோகன், கே.எஸ்.இரவிச்சந்திரன், ஜோசப் சாமுவேல் மற்றும் குமரி விஜயா, பி.கே.மூர்த்தி எம்.சி, கார்த்திக் மோகன், தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், பரிதி இளம் சுருதி எம்.சி, ஆர்.வரதன், பி.டி.சி. வெ.பாலு, கே.ராஜா குப்புசாமி, கோ.ஏகப்பன், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, பா.ஸ்ரீராமலு எம்.சி, டாக்டர் சாந்தகுமாரி எம்.சி,

வே.வாசு, எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி, எம்.டி. ஆர்.நாகராஜ், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், லயன் பி.உதயசங்கர், பி.ஜெ.துளசிங்கம், டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, கோ.மணி, எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா. கலைச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜி.சீனிவாசன், ஆர்.மோகன கிருஷ்ணன், ஆர்.செல்வராஜ் (எ) பாபு, பி.சுதர்சன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

## கரூரில் 31 பேருக்கு அரசுப் பணி வழங்கிய விவகாரம்:

# போட்டித் தேர்வுக்கு தயாராகும் பல லட்சம் தேர்வர்கள் கொந்தளிப்பு!

## த.வெ.க. அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்த முடிவு!

*சென்னை, ஜூலை 12-*

*கரூரில் 31 பேருக்கு விதிகளுக்கு புறம்பாக அரசுப் பணி வழங்கியதற்கு எதிராக போட்டித் தேர்வர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். கடந்த 2025ம் ஆண்டு செப்டம்பர் 27ம் தேதி கரூரில் நடந்த விஜய் பங்கேற்ற த.வெ.க. கட்சி பொதுக்கூட்டத்தில் கூட்டநெரிசல் ஏற்பட்டு 41 பேர் பலியாகினர். தொடர்ந்து நடந்த பேரவை தேர்தல் வெற்றியால் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் விஜய் முதல்வரானார்.*

*இந்த நிலையில் கரூர் சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு வருவாய், பள்ளி கல்வி, போலீஸ் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளில் இளநிலை உதவியாளர் உள்ளிட்ட அரசுப்பணிகளுக்கான தற்காலிக நியமன ஆணைகளை நேற்று தமிழக முதல்வர் விஜய் வழங்கினார். தகுதித் தேர்வுகளை முறைப்படி எழுதி தங்களின் வாய்ப்புக்காக காத்திருக்கும் லட்சக்கணக்கான தேர்வர்களை வஞ்சிக்கும் வகையில், இந்த நியமனங்கள் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*தமிழகத்தில் அரசுப்பணி நியமனங்கள் அனைத்தும் டிஎன்பிஎஸ்சி எனப்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்பது சட்ட விதி ஆகும். குரூப் 1, குரூப் 2, குரூப் 3 மற்றும் குரூப் 4 போன்ற பல்வேறு போட்டித் தேர்வுகளை எழுதி, கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட பணிகளுக்காக லட்சக்கணக்கான ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த தேர்வர்கள் இரவு பகலாக படித்து வருகின்றனர். இத்தகைய கடினமான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் மாணவர்களின் உழைப்பை விஜய் அரசு கொச்சைப்படுத்தியுள்ளதாக தேர்வர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.*

*முறையான தகுதித் தேர்வுகள் ஏதுமின்றி, அரசியல் காரணங்களுக்காக அரசு வேலைகளை இழப்பீடாக வழங்குவது தவறான முன்னுதாரணம் என போட்டித் தேர்வுக்கு தயாராகி வரும் தேர்வர்கள் ஆவேசமடைந்துள்ளனர். 'அரசுப் பணிகளை தங்களின் அரசியல் லாபத்திற்காக விஜய் அரசு தாரை வார்த்துள்ளது' என்று குற்றம் சாட்டும் தேர்வர்கள், தங்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் இத்தகைய முடிவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில் இறங்கவும் முடிவு செய்துள்ளனர்.*

*விஜய் அரசின் இந்த தன்னிச்சையான உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், பணி நியமனங்களை தற்காலிகமாக வழங்க அனுமதித்த போதிலும், இந்த நியமனங்கள் அனைத்தும் வழக்கின் இறுதித் தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என்ற அதிரடி நிபந்தனையை விதித்துள்ளது. மேலும், இந்த விவகாரம் தொடர்பாக விரிவான விளக்கம் அளிக்க டிஎன்பிஎஸ்சி உறுப்பினர் செயலாளருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த அரசுப்பணிகள் சட்டப்பூர்வமாக நிரந்தர மற்ற நிலையில் இருப்பதால், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது. பொதுமக்களின் வரிப்பணத்திலும், தகுதி வாய்ந்த ஏழை தேர்வர்களின் உரிமைகளை பறித்தும் முதல்வர் விஜய் தலைமையிலான அரசு அரங்கேற்றியுள்ள இந்த நாடகம் இளைஞர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த துயர சம்பவத்தைத் தொடர்ந்து, தமிழகத்தில் அரசு வேலைக்காக பல ஆண்டுகளாக காத்திருக்கும் 65 முதல் 75 லட்சம் வரையிலான பதிவு செய்த இளைஞர்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தங்களின் மூப்பை பாது காத்து வரும் தகுதியான பல லட்சம் இளைஞர்களை புறந்தள்ளிவிட்டு, விதிகளை மீறி தற்காலிகப் பணியிடங்களை வழங்கிய சம்பவம் தற்போது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.*

## தி.மு.க.தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தலைமையில்

# தி.மு.க. தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## ஏழை – எளியோருக்கு நல உதவிகளுடன் – அறுசுவை உணவு வழங்கும் விழா!

*சென்னை, ஜூலை 12 -*

*தி.மு.க. தொண்டர் அணியின் சார்பில் காலத்தை வென்றவரும் அரசியல் ஞானியுமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103ஆம் பிறந்த நாள் விழாவினையொட்டி, இன்று (12.07.2026 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 5.00 மணியளவில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்கதம் ஒன்றியம், நீர்ப்பெயர் ஊராட்சியில் உள்ள "மேல்வசலை கிராமத்தில்" மாநிலத் தொண்டர் அணி மாநிலச் செயலாளர் மாஸ்டர் பெ. சேகர் தலைமையில் - மாநிலத் தொண்டர் அணித் தலைவர் காஞ்சி ஜி.சுகுமாரன் முன்னிலையில்;*

*காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன்.சிவக்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் இராமகிருஷ்ணன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி அறுசுவை உணவு வழங்குகின்றனர்.*

*தொண்டர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் ப.கோமான், ஆவின் எம்.ஆறுமுகம், சுப.சரவணன், பி.எம்.முனிவேல், எஸ்.எம்.அன்பழகன், எஸ். எம்.கே.அண்ணாதுரை, மாநிலப் பயிற்சியாளர் இ.குருதாஸ் மற்றும் மேல்வசலைக் கிளைக் கழகச் செயலாளர் மு.சண்முகம், கீழ்வசலைக் கிளைக் கழகச் செயலாளர்கள் கஜபதி, காத்தவராயன், நீலமங்கலம் கிளைக் கழகச் செயலாளர்கள் என். டி.ஜெயபால், சிவானந்தன், தாமரைச்செல்வன், நீர்ப் பெயர் கிளைக் கழகச் செயலாளர் வாசுதேவன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*மேல்வசலை மு.கண்ணப்பன், கி.இராமசாமி, மா.ஆறுமுகம், முன்னாள் கவுன்சிலர், ஆதிகேசவன், இரவிச்சந்திரன், முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம், கு.எத்திராஜ், மு.குமரன், கு.தேவதாஸ் செ. சிவக்குமார், இரஞ்சித் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

## சேலம் மாநகராட்சியில் – குடிநீர் விநியோகம்

# தனியாருக்கு வழங்கியது, மக்கள் விரோத நடவடிக்கை!

## மாமன்ற உறுப்பினர் கண்டன அறிக்கை!

சேலம். ஜூலை 12–

சேலம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர், அம்மாபேட்டை மண்டல குழு முன்னாள் தலைவர் எம். குணசேகரன் கூறியிருப்பதாவது:–

சேலம் மாநகராட்சியில் குடிநீர் விநியோகப் பணியை தனியாருக்கு வழங்கக் கூடாது என்று மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றப் பட்டி ருந்தும், அந்த தீர்மானத்தை முற்றிலும் புறக்கணித்து மீண்டும் தனியாருக்கு தண்ணீர் விநியோக ஒப்பந்தத்தை வழங்கியிருப்பது மக்கள் விரோத நடவடிக்கையாகும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்றத்தின் தீர்மானத்திற்கே மதிப்பளிக்காமல் செயல்படுவது ஜனநாயகத்தின் அடிப்படை நெறிமுறைகளுக்கு எதிரானது. பொதுமக்களின் கருத்தையும், உள்ளாட்சி அமைப்பின் அதி காரத்தையும் அலட்சியப்படுத்தி தனியாருக்கு ஆதரவாக செயல்படுவது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

குடிநீர் என்பது வணிகப் பொருள் அல்ல; அது மக்களின் அடிப்படை உரிமை. அந்த அத்தியாவசிய சேவையை தனியாரிடம் ஒப்படைப்பது மக்களின் நலனைக் காட்டிலும் தனியார் நிறுவனங்களின் நலனுக்கு முன்னுரிமை அளிப்பதாகவே பார்க்கப்படுகிறது.

எனவே, சேலம் மாநகராட்சி நிறைவேற்றிய தீர்மானத்திற்கு உரிய மரியாதை அளித்து, தனியாருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்து, குடிநீர் விநியோகத்தை முழுமையாக பொதுத்துறை மூலமே மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இல்லையெனில், மக்களின் நலனைக் காக்க ஜனநாயக வழியில் நடைபெறும் அனைத்து போராட்டங்களுக்கும் முழு பொறுப்பும் அரசுக்கே உரியது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மண்டல குழு முன்னாள் தலைவர், மாமன்ற உறுப்பினர் எம்.குணசேகரன் தெரிவித்துள்ளார்.



விடுதலைப் போராட்ட வரலாற்றின் முதல் வீரர் – மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 269வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (11.7.2026) சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முன்னாள் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி. பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் சுதந்திரப் போராட்ட மாவீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் 269வது பிறந்தநாளை முன்னிட்டு சர்வேயர் காலினியில் அமைந்துள்ள அரங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த அவரது திருஉருவப் படத்திற்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி, மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் ஏ.கே.ஆறுமுகம், முத்துகணேசன், ரவீந்திரன், சரவணன் அம்பலம், வி.சி.மாதவன், மேலமடை பிரேம் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.